# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1950/9 - 2016 ජනවාරි මස 18 වැනි සඳුදා - 2016.01.18

1950/9 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 18 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 4/3/1/128.

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியாளர் எண்ணியிருக் கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணத்தில் களுத்துறை மாவட்டத்தில், களுத்துறை பிரதேச செயலகப் பிரிவில், வேலாபுர களுத்துறை கிராமத்தில் நில அளவையாளர் நாயகத்தின் இல. மு.பி.க. 4545 வரைபடத்தில் 0.1335 ஹெக்டயார் விஸ்தீரண முடைய கீழ் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு.

**துண்டு இல. 1**

காணியின் பெயர்: மன்கட்டவத்த; விபரம்: வீட்டுத் தோட்டம், நிலையான கட்டிடங்கள் 2 உண்டு; உரிமை கோருவோர்: பிரதம முகாமையாளர் (சொத்து), இலங்கை வங்கி தலைமையகம், கொழும்பு 01; விஸ்தீரணம்: 0.1335 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப் பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 29 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு களுத்துறை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப் படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங் களையும், நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

விமல் குணதுங்க,
பிரதேச செயலாளர்,
களுத்துறை.

பிரதேச செயலகம்,
களுத்துறை,
2016, சனவரி 13.

2 - 33

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 4/3/1/119(IV) மேலதிக 3.

2015.08.11 ஆந் திகதிய 1927/27 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட

வர்த்த மானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள 08-727 எனும் 7 ஆவது பிரிவின் கீழான சிங்கள மொழி மூலம் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலுக்கு உங்களின் அவதானத்தை ஈர்க்கிறேன்.

மேல் மாகாணத்தில், களுத்துறை மாவட்டத்தில் களுத்துறை பிரதேச செயலகப் பிரிவில் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இல. 4512 எனும் வரை படத்தில் 0.0026 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணி அமைந்துள்ள கிராமம் களுத்துறை வடக்கு எனக் குறிப்பிடப் பட்டுள்ளது பிழையானது அது நாகொடை என திருத்தப்பட வேண்டும்.

விமல் குணதுங்க,
பிரதேச செயலாளர்,
களுத்துறை.

பிரதேச செயலகம்,
களுத்துறை,
2015, திசெம்பர் 31.

2 - 34

---

## திருத்தம்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: DIVKE/LND/LND2/ACQUT/5/3/3/3/4/2.
காணி அமைச்சின் இலக்கம்.: 3J/42E/326

2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதிய, 1815/28 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின்படி துண்டு இலக்கம் 01 சம்பந்தமாக உரிய பரிசீலனை செய்யும் திகதியும் நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டவாறு மாற்றப்பட வேண்டும் என்பதை அறியத்தருகின்றேன்.

| திகதி | துண்டு இலக்கம் | நேரம் |
|---|---|---|
| 2016.02.01 | 01 | மு.ப. 10.00 மணி |

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 28 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் இரு பிரதிகளில் எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். எல். எஸ். விஜேசிங்க,
பிரதேச செயலாளர்,
குளியாப்பிட்டி கிழக்கு.

பிரதேச செயலகம்,
குளியாப்பிட்டி கிழக்கு,
2016, சனவரி 13.

2 - 35

---

## திருத்தம்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: KDS/KUN/04/07/16/04/51.
காணி அமைச்சின் குறிப்பு இலக்கம்.: 4/3/9/2011/WS/132

மேற்குறிப்பிடப்பட்டுள்ள தலைப்பின் கீழ் 2015 ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதிய 1937/22 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதி விசேட வர்த்தமானியின் இலக்கம் 11 - 134 இன் கீழ் பிரசுரிக்கப் பட்டுள்ள காணி எடுத்தற் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தலில், குறிப்பிடப்பட்டுள்ள திகதியை அகற்றி, அதற்கு பதிலாக வேறொரு திகதியை குறிப்பிட்டு அதனை உள்ளடக்குவதன் மூலம் அவ்வறிவித்தலை கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தப்பட வேண்டும் என இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

| அகற்ற வேண்டிய திகதி | உள்ளடக்கப்பட வேண்டிய திகதி |
|---|---|
| 2015 திசெம்பர் 02 | 2016 பெப்புருவரி 17 |
| 2015 நவெம்பர் 24 | 2016 பெப்புருவரி 09 |

எல். ஏ. டீ. கீதா இந்திராணி,
பிரதேச செயலாளர்,
குண்டசாலை.

பிரதேச செயலகம்,
குண்டசாலை,
2016, சனவரி 11.
2 - 36

---

## திருத்தம்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: KDS/KUN/04/07/16/04/52.
காணி அமைச்சின் குறிப்பு இலக்கம்.: 4/3/9/2011/WS/133

மேற்குறிப்பிடப்பட்டுள்ள தலைப்பின் கீழ் 2015 ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதிய 1937/22 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியின் இலக்கம் 11 - 135 இன் கீழ் எடுக்கப் பட்டுள்ள காணி எடுத்தற் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தலில், குறிப்பிடப்பட்டுள்ள திகதியை அகற்றி, அதற்கு பதிலாக வேறொரு திகதியை குறிப்பிட்டு அதனை உள்ளடக்குவதன் மூலம் அவ்வறிவித்தலை கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தப்பட வேண்டும் என இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

| அகற்ற வேண்டிய திகதி | உள்ளடக்கப்பட வேண்டிய திகதி |
|---|---|
| 2015 திசெம்பர் 02 | 2016 பெப்புருவரி 17 |
| 2015 நவெம்பர் 24 | 2016 பெப்புருவரி 09 |

எல். ஏ. டீ. கீதா இந்திராணி,
பிரதேச செயலாளர்,
குண்டசாலை.

பிரதேச செயலகம்,
குண்டசாலை,
2016, சனவரி 11.
2 - 37

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.